கூட்டிணைக்கப்பட்ட ஒரு குழுவாதல் வேண்டும்: அத்துடன் அது அப்பெயர்கொண்டு வழக்குத் தொடுக்கலாம் என்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம் அத்துடன் அது பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும் அது விரும்பியாங்கு அதனை மாற்றவும் முழுத்தத்துவமும், அதிகாரமும் உடையதாயிருத்தலும் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனமானது அறக்கட்டளை நிறுவனமொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3.** கூட்டுத்தாபனம் அமைத்துருவாக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகிறது :-

(அ) தேரவாத பௌத்த மதம் குறித்த பாடநெறிகளை ஆரம்பித்தல், மேற்கொள்ளல் மற்றும் ஊக்குவித்தல் மூலம் பௌத்த மக்களின் மற்றும் அவர்களின் பிள்ளைகளின் மதசார்பான அறிவு, மனப்பாங்குகள், தேர்ச்சிகள் போன்றவற்றை ஊக்குவிப்பதற்கு ஒத்துழைப்பு வழங்குதல்;

(ஆ) பல இன, மதங்களை சேர்ந்த மக்கள் வாழும் ஓர் பிரதேசமாவதோடு அம்மக்களுக்கிடையிலான ஒற்றுமை, சமாதானம், சமூக அறிவு மற்றும் அவற்றிற்கான பங்களிப்புகளை மேம்படுத்துவதன்மூலம் அம்மக்களுக்கிடையிலான நல்லிணக்கத்தை உருவாக்குதல்;

(இ) பிரதான விமான நிலையத்திற்கு அண்மித்த பகுதியில் அமைதியான சூழலில் அமைந்துள்ள ஒரு பௌத்த விகாரை என்ற வகையில் பௌத்த மதம் தொடர்பான விரிவுரைகள், சம்மேளனங்கள், கலந்துரையாடல்கள் மற்றும் அது சம்பந்தமான திட்டங்களின்மூலம் பௌத்த கலாசாரத்தை ஊக்குவிப்பதற்காக உள்நாட்டு, வெளிநாட்டு புத்திஜீவிகள் மற்றும் பக்தர்களை அழைத்தல் மற்றும் அத்திட்டங்கள் தொடர்பான செயற்பாடுகளுக்கு முக்கியத்துவம்வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல்;

